**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

## அவர்கள் வருந்தி உழைப்பது வீண்; அவர்கள் சேமித்து வைக்கின்றனர்; ஆனால் அதை அனுபவிப்பது யாரென அறியார்

(திருப்பாடல்: 39:6)

**இன்றைய வாசகங்கள்:**

சபை உரையாளர்: 1: 2, 2:21-23;

திபா: 90: 3-6, 12-14,17;

கொலோசையர்: 3: 1-5, 9-11;

லூக்கா: 12: 13-21.

இன்றைய முதல் வாசகம் எச்சரிக்கையோடு தொடங்குகிறது. சபை உரையாளர் கூறுகிறார். 'அனைத்தும் வீண்' மேலும் நாம் செய்யும் அனைத்திலும் கடவுளை நினைவுகூர வேண்டுமென்று அவர் கூறுகிறார். படைப்புகள் அனைத்திற்கும் ஒரு இறுதி முடிவு உண்டு என்பதையும் நமக்கு நினைவூட்டுகின்றார். **இந்த உலகில் நமக்கு இருக்கும் இறுதி இலக்கு நேராக விண்ணகத்திற்கு செல்வதே.**

இரண்டாவது வாசகத்தில் புனித பவுல் உண்மை வாழ்க்கையை தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறார். அதாவது கிறிஸ்துவில் வாழ்ந்த வாழ்க்கை, கிறிஸ்துவுக்கு வெளியே வாழ்ந்த வாழ்க்கை. கிறிஸ்துவே நமக்கு எல்லாமுமாக இருக்கிறார்; விண்ணக வாழ்க்கையை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். உலக வாழ்க்கையை சார்ந்திருக்கும் அனைத்தையும் அழித்துவிடுங்கள் என்று கூறும் அவர், தொடர்ந்து நம்முடைய வாழ்க்கையை உருமாற்றுவதற்கான அழைப்பாகவும், தூய்மை மற்றும் அவரில் தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்கவும் நம்மை அழைக்கின்றார்.

இன்றைய நற்செய்தியில் கூட்டத்தில் இருந்த மனிதரிடம் பேசியதுபோல நம்மையும் பார்த்து இயேசு கூறுகிறார். "எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள்" என்று எச்சரிக்கும் இயேசு, மனிதர் மிகுதியான செல்வங்களைக் கொண்டிருப்பதால் அது அவனுக்குப் பாதுகாப்பைத் தந்துவிடாது. நாம் இந்த உலகில் பயணம் செய்யும் பயணிகள் மட்டுமே என்ற உண்மையை, இந்த உலகின் செல்வங்களும் இன்பமும் நம் கண்களை மறைத்து நம்மை குருடாக்கிவிடுகிறது.

தலையான ஏழு பாவங்களில் பேராசையும் ஒன்று. தோமஸ் அக்குவினாஸ் இவ்வாறு கூறுகிறார். தற்காலிகமான பொருட்கள் மனிதனின் ஆளுகைக்கு உட்பட்டவை. அவனுடைய தேவைக்கேற்ப அவன் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அவை அனைத்தும் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகவோ, அதற்கென அதிகம் ஆர்வம் காட்டவோ தேவையில்லை. இந்த உலகப்பொருட்கள் மீது எவ்வளவு நம்பிக்கை வைக்கின்றோமோ அந்த அளவுக்கு விண்ணகத்தை நோக்கிய நம் பார்வையை இழந்துவிடுகின்றோம். இதற்குக் காரணம்: ஒரு மனிதனின் செல்வம் எங்குள்ளதோ அங்கே அவனுடைய ஆன்மாவும் இருக்கும்.

எனவே, நமது கண்களையும் நமது எண்ணங்களையும் வீணான உலகக்காரியங்களின் மீது வைப்பதைவிட்டு, மாறாக, விண்ணகக் கொடைகளின் மீது நிலைநிறுத்துவோம். கிறிஸ்துவில் நமது கவனத்தை வைத்து, அவருக்கு மட்டுமே கீழ்ப்படிந்து, இந்த மண்ணுலகிற்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் திகழ்வோம். ✣

INTERNAL CIRCULATION ONLY
BUL 31/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

31 ஜூலை 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 18 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் (ஜூலை 24)**

# முற்றிலும் வீண்

நாம் ஒரு நிலையற்ற உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இருப்பினும் நமது இறுதி இலக்கை இழக்காமல் இந்த உலகின் பல விஷயங்களை விவேகத்துடன் பயன்படுத்திட நாம் அழைக்கப்படுகிறோம். விண்ணகத்தை நமது இலக்காகக் கொள்ளும்போதுதான் வாழ்க்கையின் முழு அர்த்தமும் வெளிப்படும்; உணரப்படும்.

